ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

வைதிகர் சொற்படி விடியற்காலத்தில் ஈசுவரனைத் தியானம்செய்ய லௌகிகனுக்குக் கொஞ்சம் மனம்தெளிந்து சாஸ்திரமுறைப்படி இதை விசாரிப்போமெனத் தோன்றிற்று. அதனால் விநயத்தோடு வைதிகரிடம் வந்து கேட்கிறான், சாஸ்திரிகளே! பெரியோர்களை தூஷிக்கக்கூடாதென்று தாங்கள் சொல்லுவது உசிதமே. ஆனால் பெரியோரெனப்படுவோருக்கு தங்களை உயர்த்திக்கொள்வதும் சிலரைத்தாழ்த்திவிடுவதும் உசிதமானதா? ஈசுவரனது ஸ்ருஷ்டியில் ஒரேவிதமாக அமைந்துள்ள மனுஷ்யர்களிடத்தில் உயர்வு தாழ்வு என்பது பெருந்தனம் வாய்ந்த சிலர் கற்பிக்காமல் எப்படி நேரும்.

**வைதிகர்:**—ஈசுவரஸ்ருஷ்டியில் மனுஷ்யர்கள் ஒரேவிதமாக அமைக்கப்பட்டதாக் யார் உமக்குச் சொன்னார்?

**லௌகிகன்:**— ஒருவர் சொல்லவேண்டுமா? பிரத்தியக்ஷமாக இப்பொழுதுஇருப்பதுபோலவேதான் ஆதியிலுமிருக்கவேண்டும். இப்பொழுது மனிதர்களுள் என்ன வித்யாஸம் காணப்படுகின்றது? அங்காவயவங்கள் இரத்தமாம்ஸாதிகள் ஒரேவிதமாகத்தானே இருக்கின்றன. இதில் உயர்வு தாழ்வு என்ன வேண்டியிருக்கிறது?

**வைதி:**— அங்காவயவங்கள் ஒரேவிதமாயில்லாமல் கூடக்குறைவாக நொண்டி, முடவன், கூனன், குருடன் முதலியவர்களிடம் பிறப்பிலேயே வித்தியாஸமாய்க் காணப்படுகின்றதே. அவர்களிடம் தாழ்மையும் பாராட்டப்படுகின்றதே. காலராமுதலிய தொத்துவியாதியுள்ளவர்களின் இரத்தமாம்ஸாதிகள் கெட்டுப்போயிருப்பதுபற்றி அவர்கள் பொதுஜனஸ்தானங்களினின்று தூரத்தில் விலக்கப்படுகிறார்களே, அப்படியிருக்க மனுஷ்யர்களுக்கெல்லாம் அங்காவயவங்களும் இரத்த மாம்ஸாதிகளும் ஒரேவிதமாயிருப்பதாக எப்படி பாவிக்கமுடியும்?

**லௌகி:**— வேறுபட்டும் தோஷப்பட்டும் காணப்படுபவர்களைத்தவிர மற்றவரிடமொரேவிதமாகத்தானே இருக்கின்றது. அங்கு எது உயர்வு, தாழ்வு?

**வைதி:**— அங்காவயவங்கள் வேறுபடக் காரணமென்ன? இரத்தமாம்ஸாதிகள் தோஷப்படுவதற்குத்தான் என்ன காரணம்?

**லௌகி:**— முதல்கேள்விக்கு அதிருஷ்டந்தான் காரணம். பிரத்தியக்ஷ காரணம் கூறமுடியாது. இரண்டாவதற்கு அவர்கள் உட்கொள்ளும் விபரீதஆஹாரமும், விபரீதநடத்தையுங்காரணமாகலாம்.

**வைதி:**— அதிருஷ்டத்தாலும், விபரீத ஆஹார முட்கொள்ளுவதாலும், விபரீதநடக்கையை யேற்றுக்கொள்ளுவதாலும், தேஹதாதுக்கள் கெட்டுப்போவதும், அதனால் அப்படிக்கெட்டிருக்கும் இரத்தமாம்ஸாதிகளுள்ளவர்கள் விலக்கப்படுவதும், தாழ்த்தப்படுவதும் ஸஹஜந்தானென்று தாங்களே ஒப்புக்கொண்டதாகின்றதே. இது போலவேதான் பெரியோர்கள் நாளிலும் ஏற்பட்டிருக்கும் அதனால் உயர்வு தாழ்வு எது என்ற கேள்வையில்லை. இது ஈசன் ஸ்ருஷ்டியிலேயே உள்ளது. இன்னும் ஆலோசித்துப்பாரும். சுபம்.

**பத்திராதிபர்.**

ஆர்யதர்மம்.

விபவ-ௐ பங்குனி-மீ அஉ

# பிறப்பிலேயே சுத்தி அசுத்திகளுக்கு ஏற்றபடி உயர்வு தாழ்வு.

பிராணிகளிடத்திலும் உயர்வு, தாழ்வு பாவிக்கப்பட்டுவருவது வழக்கமாயிருக்கின்றது. இது தப்பு என்று தற்காலத்திய சிலாது கூற்று. பணக்காரன், படித்தவன் முதலியவர்களையுயர்த்திப் புகழ்வதும், பிச்சைக்காரன், படிக்காதவன் முதலியவர்களைத் தாழ்த்தி இகழ்வதும் எதனாலென்று அவர்களைக் கேட்போம். பணமும், படிப்பும் புகழ்வதற்கும், அஃதில்லாமை இகழ்வதற்கும் காரணமென்று குறித்த வார்த்தையினாலேயே. தெரிகின்றதேயென்றால்- அப்பொழுது உயர்வு தாழ்வு பாவிக்கப்படுவது தப்பு என்று கூறுவது தப்பாகும். உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணமிருப்பின் அவை பாவிக்கப்படுவது உசிதமேயாகும். பணம் படிப்பு முதலியவற்றால் அவை பாவிக்கப்படுவது சரியே. ஆனால் பிறப்பினாலேயே அவை பாவிக்கப்படுவது தப்பு என்றால் அது பொருந்தாது. பிறப்பினாலேயே உயர்வும் தாழ்வும் காணப்படுகின்றது. கர்ப்ப ஸ்ரீமானுபுள்ளவன் பிறப்பினாலேயே என் கண்ணே! கண்மணியே! என் அருந்தவப்பயனே! என்பதாதி புகழப்படுகிறான். நித்தியதரித்திரனுக்குக் குழந்தை பிறந்தால் தாய்தந்தையர்களே அதைப்பற்றி—இந்தப் பிள்ளை பிறக்கவில்லையென்று யார் தவங்கடந்தாள். என்பதாதி இகழ்ந்துபேசுகிறார்களென்றால் மற்றவர் பேசக்கேழ்க்க வேண்டுமா? பிழைக்கப் பணமில்லையே என்பதனால் தரித்திரன் அப்படிச் சொல்லுகிறானேயன்றி அந்தக் குழந்தையின்மீது அபிமானமில்லாமலும், நிந்திக்க வேணுமென்றும் சொல்லுவதில்லையென்றால்-அபிமானமிருக்கட்டும் ஏதோ ஒரு காரணமிகழ்வதற்கு இருக்கக்கொண்டு தான் அப்படி நேருகிறது. அபிமானிக்கப்படுபவன் தாழ்த்தத்தகாதவனென்றும் தாழ்த்தத்தக்கவன் அபிமானிக்கத்தகாதவனென்றும்

பிறப்பிலேயே சுத்தி அசுத்திகளுக்கேற்றபடி உயர்வு தாழ்வுகளை

கருதமுடியாது. ஆகவே பிறக்கும்பொழுதே புகழப்படுவதற்கு மிகழப்படுவதற்கும் பணமும் படிப்பும் மற்ற குணகர்மாதிகளும் காரணமில்லை. அவையெல்லாம் பிறந்தபின் வெகுகாலம்கழித்து நேரக்கூடியவைகள். ஆகவே அதற்குக் காரணம் பிறப்புக்கு முன்னமேயே ஏற்பட்டிருக்கவேண்டும். தாய்தந்தைகளுக்கும் பிறக்கும் சிசுவிற்கும் அஸாதாரணகாரணமான சுக்கில சோணிதாதிகளுக்கும் ஸாதாரணகாரணமாகிய தேசகாலாதிகளுக்கும் உள்ள சுத்தி அசுத்தியாகும், சுருக்கிச்சொன்னால் ஜாதி என்பதாகும். ஆகையால் ஜாதியாலேயே (பிறப்பினாலேயே) உயர்வு தாழ்வு கூறப்படுவது உசிதமேயாகுமென்று பெரியோர்களது கருத்து. தாய் தந்தை முதலியவர்களின் சுத்தியென்பது அவர்களது திரிகரண (மூன்று கரணங்களின்) சுத்தியாகும். உலகத்திலும் சொன்னதை உண்மையென்று ரூபிப்பதற்காக 'திரிகரண சுத்தியாய்ச் சொல்லுகிறேன்' என்று சொல்வது உண்டு. அந்த திரிகரணங்கள் மனது, வாக்கு முதலிய இந்திரியங்கள், சரீரம் எனப்படுவனவாகும். அவற்றுள் மனச்சுத்தி யோகாப்பியாஸத்தாலும் வாக்கின் சுத்தி ஸம்ஸ்கிருதசப்தத்தைச்சொல்லுவதாலும் மற்ற இந்திரியங்களின் சுத்தி சுபமான அததன் விஷயங்களை ஸேவிப்பதாலும் சரீரசுத்தி ஆஹாராதிசுத்தியாலும் ஸம்பாதிக்க வேண்டியதாகும். துர்வாஸனையெனப்படும் கெட்டவிருத்திகளால் மனது அசுத்தியடைகின்றது. ஸம்ஸ்கிருதசப்தமல்லாமல் வேறுதேச பாஷாதி சொற்களால் வாக்கு அசுத்தியடைகின்றது. மற்ற இந்திரியங்கள் அசுபங்களான விஷயங்களின் ஸேவையால் அசுத்தியடைகின்றன. சரீரம் ராஜஸதாமஸங்களான கெட்ட ஆகாரங்களால் அசுத்தியடைகின்றது. அததன் அசுத்திகளை அததன் நிவர்த்திக்குக் காரணங்களாகக் குறிக்கப்பட்ட ஸாதனங்களால் விலக்கி சுத்தியை ஸம்பாதித்துக்கொண்டவர்களுக்குச்சிறந்த ஸந்தானமேயுண்டாகும். அன்றியும் ஒவ்வொரு வஸ்துக்களும்தனது உபாதானகாரணத்திற்கு ஸமானமான ஜாதியுடையதாகவே உண்டாகும். அதாவது மண்ணால் செய்யப்பட்ட குடம் மண்குடமாகவும் பொன்னாலாய குடம் பொன் குடமாகவுமாவது பிரஸித்தமல்லவா? அல்லாமலும் காரணவஸ்துவின் பரிசுத்திக்கேற்றவாறு கார்யவஸ்துவிலும் பரிசுத்தியேற்படும் என்பது மாத்திரமின்றி ஸுவர்ணத்தால் செய்யப்பட்ட நகையிலும்மாத்துக்கட்டையான

ஸுவர்ணத்தாலாக்கிய நகையிலும் வித்தியாஸத்தைக் கண்டவர்களுக்கு பிரத்தியக்ஷமன்றோ. ஆனால் இந்த ஒன்று கவனிக்க வேண்டும். அதாவது ஸுவர்ணம் மாத்துக்கட்டையாய் போய் விட்டதற்காக அதனால் உண்டாக்கிய நகை ஸுவர்ணநகையாகாமல் வெள்ளி நகையாகவோ பித்தளைநகையாகவோ ஆய்விடாது. ஆகவேஒரு வகுப்பினரான தாய்தந்தைகளுக்கு ஜனிக்கும்சிசுவும் அதேஜாதியுடையதாயிருக்கும், அவர்களின்குணதோஷத்திற்காக வேறுஜாதியாய்விடாது. அந்த திரிகாணங்களின் சுத்தியை யோக ஸேவையால் கண்டறிந்த மஹான்கள் அது இன்னஜாதியாயிருக்கவேண்டுமென்று தீர்மானித்து வர்ணாச்ரமவியவஸ்தையையும் அதில் உயர்வு தாழ்வையும் சுருதியில் கூறியவாறு தங்களது ஸ்மிருதியிலும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அந்த வியவஸ்தையை மீறிக் கண்டவர்களையெல்லாம் "என் ஸஹோதரர்களே" யென்று அழைப்பவர்கள் தன்ஸொத்தில்ஒருகாலணாவாவது அவர்களுக்குப் பிரித்துக்கொடுப்பார்களா? கண்டவர்களையெல்லாம் ஸஹோதரராக பாவிப்பவர்கள் ஒரேதாயிடம் பிறந்த தன் ஸஹோதரனோடு பாகவியாஜ்யம் செய்யாமல் விடுகின்றார்களா? பெற்ற தகப்பனைப் பறக்கவிட்டவர்களுக்கா கண்டவர் ஸஹோதரராவர்? ஆகவே சுத்தஜாதியாரான தாய்தந்தைகளுக்குப்பிறந்தவர் சுத்தஜாதியான உயர்ந்தவர்தான், மற்றவர் மற்றவர்தான். எவ்வளவோ ஜன்ம பாம்பரையாக சுத்த ஸாத்துவிக ஆகாரத்தையே புஜித்து ஸம்ஸ்கிருத சப்தத்தாலேயே தங்களது பாரலௌகிககாரியங்களைச் செய்துகொண்டு, மற்ற இந்திரியங்களாலும் சுபவிஷயங்களையே அனுபவித்து மனதில் சுபவாஸனையையே விருத்திசெய்துகொண்டிருப்பவர்களும் இப்படியெல்லாமில்லாத மற்றவர்களும் ஒரே மாதிரியாவார்களா? ஆகையால் பெரியோர் வழங்கிவந்த வர்ணாசிரமவிபாகங்களையனுஸரித்து யாவரும் சிரேயஸ்ஸையடைவார்களாக. சுபம்.

பா-ர்.

---

# யோகாசாரமதம்.

———()———

மதாபிமானிகளே !

சிறந்த மதாபிமானம் அமைந்த தங்களுக்கு மததத்துவங்களை அறிந்துகொள்வதில் ஆவல் அதிகமிருக்குமென்பது நிச்ச

யம் மதாபிமானமற்று நவீநாகரீகமுற்று மதக்கிரந்த ஸித்தாந்தங்களையும், புராதநாசாரங்களையும், மனு, யாக்ஞவல்கியர் முதலிய மகரிஷிகளையும், பகவதவதாரங்களாகிய ஆசார்யர்களையும் இகழ்ச்சியாக நிந்திக்கும் தற்காலத்திய மேதாவிகளுக்குத் தான் மததத்துவங்களை உணர்வதில் உபேக்ஷை உண்டாகும். நமது தாய் நாட்டில் மதங்கள் எவ்வளவு இருந்தன? அவைகளைக் கண்டுபிடித்தவர்கள் யார்? அவைகளின் ஸ்வரூபமெவ்விதம்? என விசாரித்துத் தீர்மானித்துக் கொள்ளாமல் காலத்தை வீணாகக் கழிப்போமானால் நம்மைக்காட்டிலும் வேறு சோம்பேரி சிரேஷ்டர்கள் இருக்கமாட்டார்கள். தற்போது சில நவீனர்களுக்கு "மதங்கள் விஸ்தாரமாகப் பரவியதிகமாகவிருப்பதுகூட" திருப்தியில்லை. மேனாட்டைப்போல் மதப்பிரிவினை அதிகமாக இல்லாமலிருப்பது தான் தேசத்திற்கே அழகாகுமென்றும் கருதுகிறார்கள். பரதகண்டத்தில் மதப்பிரிவினை அதிகமாக இருப்பது தேசகௌரவத்தையே அதிகமாக வெளிக்காட்டுகிறது. மதங்களதிகமிருந்தால் தேசத்துக்கு இகழ்ச்சியென்பது அறியாமையாலேயேயல்லவா? மதங்களன்றோ தேசச்சிறப்பைத்தருவது மதங்கள் அதிகப்பிரிவையடையாமல் ஒன்று, இரண்டு பிரிவு மாத்திரமாயிருப்பது தான் தேசச் சிறப்பைக் கெடுத்துவிடும். ஒரு கிராமத்தையடைவதற்கு பலவித வழிகள் இருக்குமாயின் அவைகளால் அக்கிராமங்களுக்கு அதிகக் குறைவு என்று சொல்லமுடியுமா? கௌரவமதிகமென்றன்றோ கூறவேண்டும். மார்க்கம் குறைவாகவிருக்கும் கிராமத்தையோ குறைவாகத் தான் கருதக்கூடும். ஆகவே மதங்கள் நமது நாட்டில் நாநாவாகவிருப்பது பரதகண்டத்துக்கு அலங்காரமேயாகும். ஆனால் நமது நாட்டில் மதமதிகமாக சாகோபசாகையாக விருத்தியடைந்திருந்தபோதிலும், நாம் அவைகளைப்பற்றிச் சிறிதும் ஞானமின்றி வீணில் தூராக்ஷேபம் செய்துகொண்டும், காலத்தைக் கழிக்கிறோமே என்பது தான் வருந்தத்தக்கது — ஆர்யமதங்களில் நமக்குத்தான் அதிக வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. மகம்மதியர்கள் முதலிய மதாந்தரஸ்தர்களுக்கு மதத்தில் தான் விருப்பம் அதிகம். மதத்துக்காகப் பிராணனையும் விட்டுவிடுவதற்கு அவர்கள் துணிவார்கள். நாமும் பணத்துக்காகப் பிராணனையும்விடத் துணிகிறோம். நமக்கு மதமன்றோ பிராணதாரம். அஃதில்லாவிடின் பலமற்றவர்களாகவும்,

நிர்ஜீவர்களாகவும்தானுகி விடுவோம். இதனாலேயே தான் பல நூற்றாண்டுகளாக பிறநாட்டாருக்கு அடங்கி அடிமைப்பட்டிருக்கிறோம். பிறநாட்டார் நம்மை ஸ்திரீகளைப்போல் அடிமையாக நினைக்கிறார்கள் என்ற விஷயம் நம்மவர்களுக்குத் தேசிய ஜனஸமூகச் சீர்திருத்தக்காரர்கள் பலர் தோன்றியிருக்குமிச்சமயத்தில்த் தெரியாமலிருக்குமா? நாம் ஸ்திரீகளாகஆனோமே என்றஉணர்ச்சியும் உண்மையாகவுள்ளவர் ஒருவரும் தற்போது கிடையாது. ஆயிரத்தில் யாராவது ஒருவருக்கு அவ்வுணர்ச்சியிருக்குமாயின் அதையும் காரியத்தால் எவ்வளவு வரையில் அவ்வொருவரால் காட்டமுடியும்? ஆகவே நாம், மதவல்லமையைப் பெறுவதற்கு இதுதான் தக்க ஸமயம். நமக்கு ஆயுளோ சொற்பம். அதையும் வீணில் செலவழிப்பது தகுதியில்லை. அடிமைகள் பெரிய பிரபுக்களாக ஆகவேண்டுமானால், மேனாட்டு துராசாரங்களில் மோகத்தைவிட்டுப் புநிதமான புராதநாசாரங்களைப் போற்ற வேண்டும். நம்முடைய க்ஷேமத்தைக் கருதி நமக்குள் எவ்வளவு மதபேதங்களும், அபிப்பிராயபேதங்களும் இருந்தாலும்,இவ்வற்ப சச்சரவுகளை விட்டொழித்தல் வேண்டும். அற்பப்போராட்டங்களை விட்டொழித்தால், நமக்குள் யாவரும் பொதுவாய் அங்கீகரிக்கத்தக்க விஷயங்களில் ஒற்றுமையும், அதனால் பிறநாட்டாருக்கு நம்மிடம் பயமும் அதிகரிக்குமென்பதில் என்ன ஸந்தேகம். மதவொற்றுமையைத் தொடர்ந்தே தான் பாரததேசம் மற்றக்ஷேமங்களையும் அடையவேண்டும். மேனாடுகளில் ஜனங்களுக்குள் அரசாங்க விஷயமே தான் ஒற்றுமையை விளைவிக்கும். இவ்வண்ணம் இன்னும் அனேக நாடுகளில் மதத்தினும் வேறான விஷயங்களைக் கொண்டே ஒற்றுமை எற்படுவதுண்டு. நமது பாரதகண்டத்துக்கோ மதமே ஜனங்களுக்குள் ஒற்றுமையைக் கொடுக்குமென்பது இத்தேசஸ்வபாவம் ஆகையால் இத்தேசம் க்ஷேமமடையவேண்டுமாயின் முதலில் வேண்டியது இது தான். மதத்தைக்குறித்து வேலை செய்து நம்மை உஜ்ஜீவிக்கும்படி நாமே செய்துகொள்ளவேண்டும் என்பது தான் முதல் கடமையாகும். மதவிஷயத்தில் எப்போது அபிமானம் கொஞ்சம் குறைய ஆரம்பிக்குமோ? அப்போதே நமக்கும், நம் நாட்டிற்கும் விநாசகாலமென்றே தீர்மானித்துக் கொள்ளலாம். ஆர்யதர்மாபிமானிகளுடைய ஹிதோபதேசத்தாலும் அவ்வபிமானத்தைச் சிறிதும் ஸம

பாதித்துக் கொள்ளாமலிருந்தால் விநாசம் மிகவும் ஸமீபித்துவிடுமன்றோ, ஒருவன் இறந்துபோகுமுன் எவ்வளவு நல்ல ஔஷதங்களையும் உட்கொள்வதில்லையன்றோ, இச்சந்தர்ப்பத்தில் ராவணனுக்கு விபீஷணன் உபதேசித்த ஸாரவசனம் ஞாபகத்தில் வருகிறது. அதாவது

परेतकाले हि गतायुषो नराः हितं न गृह्णन्ति सुहृद्भिरीरितम् ।

என்று ஆகையால் மதத்தைத் துவேஷித்துக்கொண்டால் நாம் அடியோடு நசித்துவிடுவோமாதலின் யோகாசாரமதத்தை ஆதரவுடன் கவனிக்கவேண்டும்.

ஹிரண்யகர்போபாஸகர்களில் சிலர் புத்திவடிவஸ்திர விக்ஞானத்தை ஆத்மாவாக ஒப்புகின்றனர் என்று முன்னர் நிரூபித்து வந்தனம். ஆனால் அம்மதத்துக்கும்யோகாசாரமதத்துக்கும் பேதமுண்டு. அவ்விரண்யகர்போபாஸகர் நிலையான புத்திவடிவ விக்ஞானத்தை ஆத்மாவாக ஒப்புகின்றனர். யோகாசாரரோ க்ஷணிகவிக்ஞானத்தையே ஆத்மாவாகக் கூறுகின்றனர். இதுதான் இவர்களுக்கு பரஸ்பரமுள்ள பேதம். ஆகையால் நிலைத்துள்ள புத்தியாத்மவாதிமதத்தை முன்னமே நிரூபித்துக் கண்டித்திருப்பதால் க்ஷணிகவிக்ஞானவாதியோகாசாரமதத்தை வர்ணிப்பாம்.

இவர்கள்மதத்தில் விக்ஞானமே ஆத்மாவாம். அவ்விக்ஞானம் இயற்கையாய் பிரகாசவடிவமாதலின் சேதனமென்றும் கூறப்படும். இவ்விக்ஞானம் பாவபதார்த்தமாதலின் க்ஷணிகமுமாகும். இவர்மதத்தில் பாவபதார்த்தமனைத்தும் க்ஷணிகமென்று ஸித்தாந்தம். ஏனெனின் எவ்வஸ்துவுக்கு உத்பத்திக்குப்பின் இரண்டாவது க்ஷணத்தில் ஸம்பந்தம் உண்டாகிறதில்லையோ, ஆனால் உத்பத்திக்ஷணத்தில்மட்டிலும் ஸம்பந்தம்உண்டாகிறதோ? அப்பதார்த்தம் க்ஷணிகமாகுமன்றோ? இவ்வண்ணம் இவ்விக்ஞானமும் க்ஷணிகந்தானென்பது இவர்களின் அபிப்பிராயம், அந்த க்ஷணிகவிக்ஞானமிருவகைத்து; ஒன்று பிரவர்த்திவிக்ஞானம், இரண்டாவது ஆலயவிக்ஞானமுமாகும். "இது குடம், இது சரீரம்" என்னும் விக்ஞானதாரையே பிரவர்த்திவிக்ஞானதாரையாகும். "நான், நான்" என்னும் விக்ஞானதாரை ஆலயவிக்ஞான

தாரையென்பர். அவ்வாலயவிக்ஞானதாரையினின்றும் பிரவர்த்தி விக்ஞானதாரையுண்டாகும். மனமும்கூட பிரவர்த்திவிக்ஞானத் தால்தான் அறியப்படவேண்டும். ஆகவே அதுவும் அவ்வாலய விக்ஞானதாரையின் கார்யந்தான். ஆதலின் அப்புத்தியே ஆத்மா வாம். ஆலயவிக்ஞானதாரையும், பிரவர்த்திவிக்ஞானதாரையும் கலந்துகொண்டு உதிக்குமாயின் அது ஜீவாத்மாவுக்கு பந்த மெனப்படும். அவ்வாலயவிக்ஞானதாரையில் பிரவர்த்திவிக்ஞான தாரையின் பாதசிந்தனத்தால் உளதாகும். நிர்விசேஷக்ஷணி காலயவிக்ஞானதாரையிலேயே ஸ்திதியையடைவது மோக்ஷமாம். பிரவர்த்திவிக்ஞானதாரை கலக்காமலிருக்கும் ஆலயவிக்ஞான தாரையே யோகாசாரமதத்திலீசுவரரூபமுமாகும். இதைத்தவிற வேறு ஈசுவரனிவர்களொப்புவதில்லை. அன்றியும் யோகாசார மதத்தில் உலகிலுள்ள ஸம்பூர்ணபதார்த்தங்களும் விக்ஞானாகாரம் என்பது ஸித்தாந்தம். அவ்விக்ஞானமோ பிரகாசரூபமாக இயற் கையாகவுள்ளது. க்ஷணத்துக்குக்ஷணம் அவ்விக்ஞானம் நசிக்கு மாம். பூர்வக்ஷணவிக்ஞானத்தை உத்திரக்ஷணத்தில் உண்டா கும் விக்ஞானம் நசிக்கச்செய்யும். அப்படியே இரண்டாவது க்ஷணத்தில் உண்டாகும் விக்ஞானத்தை மூன்றாவதுக்ஷணவிக் ஞானமும், நான்காம்க்ஷணவிக்ஞானம் மூன்றாவதுக்ஷணவிக்ஞா னத்தையும் நசிக்கச்செய்யுமாம். இவ்வாறு நதியின் பிரவாகம் போல் விக்ஞானதாரா உண்டாகாநிற்கின்றதால் புத்தியை க்ஷணிகமாகவும் சுயம்பிரகாசமாகவும் கற்பனைசெய்துகொண்டு அதனையே ஆத்மாவாகக் கருதுகின்றனர்.

இங்கு ஒரு சங்கை. க்ஷணிகவிக்ஞானத்தையாத்மாவாக ஒப்பின் ஸுஷுப்தியில் அவ்வாத்மாவில்லையென்பதாக முடியும். ஏனெனின் ஸுஷுப்தியில் விக்ஞானமொன்றும் காணப்படவில் லையே ஸுஷுப்திக்குமுன் உண்டாகிய க்ஷணிகவிக்ஞானமும் "सुषुप्तिर्हि पूर्वापरविज्ञानानां अवधिः" என்று கூறினபடி சுஷுப்தி யால் நசித்துவிட்டதால் ஸுஷுப்திகாலத்தில் விக்ஞானத்தை உண்டாக்கும் காரணம் யாதொன்றுமின்றாம். ஆகையால் ஸுஷுப்தியில் விக்ஞானத்தினுத்பத்தியே அஸம்பாவிதமாதலின் எங்ஙனம் க்ஷணிகவிக்ஞானதாரையை ஆத்மாவாகக் கூறமுடியும்? என்று.

ஸமாதானம்:— சற்றுமுன் பூர்வக்ஷணவிக்ஞானதாரா உத்தரக்ஷணவிக்ஞானதாரைகளுக்குக் காரணமாயிருப்பதால் நதியின் பிரவாஹத்தைப்போல் அவ்விக்ஞானதாரை தொடர்ச்சியாய் எப்போதும் கட்டுண்டிருக்கின்றதெனச் சொன்னோமல்லவா? அதையனுஸரித்து ஸுஷுப்திக்குமுந்திய விக்ஞானம் தான்நசிக்கும்போது ஸுஷுப்திகாலத்தில ஸூக்ஷ்மமான ஆலயவிக்ஞானதாரையை உத்பத்திசெய்துவிடுகிறது. ஆகவே ஸுஷுப்தியில் பிரவர்த்திவிக்ஞானம் யாதொன்றுமில்லையாயினும் ஆலயவிக்ஞானதாரை இல்லாமல் போவதில்லை. ஆலயவிக்ஞானதாரா அதிஸூக்ஷ்மமாகவிருப்பதால் அக்காலத்தில் புலப்படவில்லை. இன்றேல் விழித்தபிறகு "நான் ஸுகமாகத் தூங்கினேன்" என்று அனுபவம் உண்டாகமுடியாதன்றோ. ஆகையால் ஸுஷுப்தியிலும் க்ஷணிக விக்ஞானவடிவாத்மா இருப்பதேயாகின்றது.

சங்கை:— விக்ஞானம் க்ஷணிகமாயிருப்பதால் அதையாச்ரயித்து நிற்கும் ஸம்ஸ்காரமும் க்ஷணிகந்தானானதால் முன்னனுபவித்த வஸ்துவின் ஸ்மரணம் வேறுகாலத்தில் உண்டாகமுடியாதென்று.

இது ஸரியல்ல. எங்ஙனம் ஒன்றன்மேலொன்றாக அமைந்துள்ள வஸ்திரங்களில் அவைகளுக்குக் கீழிருக்கும் கஸ்தூரியின் வாஸனை என்னும் கந்தாவயவங்கள் முறையாக பிராப்தமாகிவிடுகின்றனவோ அங்ஙனமே முந்தின விக்ஞானத்தாலுண்டான ஸம்ஸ்காரங்களும் பிந்தின விக்ஞானங்களில் ஸம்பந்திக்கின்றன. அச்சம்ஸ்காரபலத்தால் ஸ்மிருதியுண்டாவதில் என்ன தடை? விக்ஞானத்தைப்போல் ஸம்ஸ்காரம் வேறொரு ஸம்ஸ்காரத்தையுண்டு பண்ணிவிட்டு நசித்துவிடுகிறது என்றிவர்களின் அபிப்பிராயம். ஆகவே க்ஷணிகவிக்ஞானமே ஆத்மாவாகும். இவ்வுலகமெல்லாம் விக்ஞானாகாரந்தான். வேறு வஸ்துவில்லை என்று யோகாசாரஸித்தாந்தம். இனி இதற்கு ஸமாதானம் கூறமுயல்வோம்.

சுபம். V. ஜகதீசுவரசாஸ்திரிகள்.

---

## தர்மநிர்ணயஸபை.

காசிமாநகரில் நடந்த அகிலபாரதவர்ஷீய ப்ராம்மணமஹாஸபையில் ஒவ்வொரு மாகாணத்திலும் ஓர் மாஹாணஸபையும்

அதையொட்டி ஓர் தர்மநிர்ணயஸபை ஏற்படவேண்டுமெனத் தீர்மானித்தது. அதையொட்டி மைலாப்பூர் ஸம்ஸ்கிருதகாலேஜ் "ப்ரின்ஸிபால்" வேதாந்தபூஷணம் பிரும்மஸ்ரீ கருங்குளம் கிருஷ்ணசாஸ்திரிகளவர்கள் ஸபாபதி, சாஸ்திரதிலகம் சாஸ்திரரத்நாகரம் மஹோபதேசக பிரும்மஸ்ரீ மன்னார்குடி யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்கள், (பெரியசாஸ்திரிகளவர்கள் பௌத்ரர்) சாஸ்திரரத்நாகரம் ஸ்ரீசங்கரவித்யாலயம் தலைவர் பிரும்மஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள், ஸோமயாஜி அவர்களும் உபஸபாபதிகள். அடியேனும் பிரும்மஸ்ரீ தேதியூர் சாஸ்திரிகளும் கார்யதர்சிகள் எனவும் காசியிலேயே அ.பா.வ. பிராம்மணமஹாஸபை கார்யதர்சி மஹாமஹோபாத்யாய ஸ்ரீ அநந்தகிருஷ்ணசாஸ்திரிகளால் ஸ்ரீசுகதேவ மடத்தில் நிர்ணயிக்கப்பட்டு மஹாஸபையால் ஏற்கப்பட்டது. காசிஸபைக்கு வந்திருந்த பிரும்மஸ்ரீகளான M. N. சுப்ரமண்ய சாஸ்திரிகள், ராமசுப்பாசாஸ்திரிகள், ஸ்ரீமடம் தர்மப்ரசாரகஸ்ரீ V. ஜகதீச்வரசாஸ்திரிகள், தர்மக்ஞ போலகம் சுந்திரசாஸ்திரிகள் போன்றவர்களும் வருடச்சந்தா ரூ.1 செலுத்தி அதேபோல் மற்றவர்களும் சந்தாசெலுத்தி நிர்வாஹமெம்பர்களாகக்கூடும்.

தர்மசாஸ்திரஸம்சயங்களை விளக்கிக்கூற தர்மநிர்ணயஸபை என்று ஒன்று மேற்படி ஸபையின் சாகாஸபையாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேற்படி ஸபை ஸபாபதி உபஸபாபதிகள் மூவரும் மஹாமஹோபாத்யாய சேட்லூர் நரஸிம்மாசார்ஸ்வாமிகளும் மஹாமஹோபாத்யாய சிவ்ஸ்ரீ தண்டபாணிஸ்வாமி தீக்ஷிதர்வாளும் பாஷ்யபாவக்ஞ ஸ்மிருதிபூஷணம் பிரும்மஸ்ரீ ஆர்யதர்மம் பத்ராதிபர் வெங்கட்டராமசாஸ்திரிகளவர்கள், அபிநவவ்யாஸ பிரும்மஸ்ரீ ச்வேதாரண்யம் நாராயணயஜ்வா அவர்கள் பிரும்மஸ்ரீ சிவராம கிருஷ்ணசாஸ்திரிகள், தர்மக்ஞ பிரும்மஸ்ரீ போலகம் சுந்தரசாஸ்திரிகள் முதலிய வித்வான்களைக்கொண்டு இச்சபை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எற்கனவே தர்மஸம்சயமுள்ளோர் அவரவர் ஸ்ரீமடத்திற்கு எழுதித்தெரிந்துகொண்டிருக்கலாம். அதே கைங்கர்யத்தைச்செய்ய இச்சபை முன்வந்துளது.

ஸம்சயங்களை விசதமாக தேசபாஷையில் எழுதி கார்யதரிசிக்கு 154 தம்புசெட்டிவிதி, சென்னை-என்ற விலாஸத்திற்கெழுதி பயன்பெறலாம். அன்றியும் இச்சபை செய்யும் அநாதஸம்ரக்ஷ

ணம், உபநயநம் முதலிய ஸம்ஸ்காரங்களை ஏழைகளுக்கு இலவசமாகச்செய்துவைத்தல், வேதநாவ்யங்கற்பித்தல், வரதக்ஷிணை முதலிய அநாசாரங்களைத் தொலைக்க வழிதேடல், வைதிகர்களைச் சீர்திருத்தி ஸம்ரக்ஷித்தல், மதப்ராசாரம் புரிதல், இச்சமூஹத்திற்கு நேரும் தீங்குகளை எதிர்த்தல் முதலிய வேலைகளுக்கு ஸஹாயம் புரிய ப்ராம்மணநண்பர்கள் ஸஹாயம்செய்யவேண்டும். மாகாண ஸபையானஇதற்கு வருடச்சந்தா ஒருரூபாய் செலுத்துபவர் நிர்வாஹ அங்கத்தவராவர். 4-அணா வருடச்சந்தா செலுத்துபவர் ஸாதாரண அங்கத்தவராவர். காசியில் ஸபைநடந்த விருத்தாந்தம், தீர்மானம் முதலியவைகள் நடந்தபடியே தமிழில் 24-பக்கங்கொண்ட புஸ்தகமாக அச்சிடப்பட்டிருக்கிறது. நிர்வாஹ மெம்பருக்கு 1-காபி இலவசம், ஸாதாரண அங்கத்தவருக்கு புத்தகம் 1-அணா, சந்தா 4-அணா ஆக 5-அணாவுக்கு தபால் அனுப்பினால் புத்தகம் கிடைக்கும். மெம்பரல்லாதார் 2½-அணாவுக்கு ஸ்டாம்பனுப்பினால் புத்தகம் வரும்.

இன்னோக்கத்தில் அக்கரைகொண்டவர்கள் ஆங்காங்கு ஸபை ஸ்தாபிக்கலாம். இதுவரை சிஷ்டாசார பரிபாலநபரிஷத், அத்யயநஸபை, ஆர்யதர்மாபிவர்த்தினீஸபை முதலிய பல வேறு ஸபைகளும் இதற்கு சாகாஸபையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. வேறுபேருள்ள ஸபையார் தங்கள் ப்ரதிநிதி ஒருவரை இதற்குத்தேர்ந்தெடுத்து 1ரூ. சந்தா செலுத்தி தங்கள் ஸபையை இத்துடன் சேர்க்கலாம். இங்ஙனம் செய்வதால் நமது பலம் ஏகோபித்து ஸமூஹநன்மை புரியும். இதை நன்கு பர்யாலோசித்து ஸமூஹநன்மைபுரிய முன்வரும்படி ஆர்யதர்மம் நண்பர்களை வேண்டுகிறேன்.

---

## விழுப்புரம்தாலூக்கா ப்ராம்மண ஸபை.

———()———

மத்ர ப்ராந்த்ய ப்ராம்மண ஸபையின் ப்ரார்த்தனைக்கிணங்கி ஷை ஸபை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. பிரும்மஸ்ரீ யாகதீக்ஷித மஹாக்நிசித் தலைவராகவும், ஸ்ரீமான் L. ராமச்சந்திரசாஸ்திரிகள் (போர்ட்ஸ்கூல் ஹெட்மாஸ்டர்)கார்யதர்சியாகவும்நியமிக்கப்பட்டனர். இச்சபையார் மார்ச் 23, 24, 25-என்ற மூன்று நாள்

விழுப்புரத்திற்கடுத்த திருவாமாத்தூர் என்ற கோமாத்ருபுரத்தில் ஓர் மஹாஸபை நடத்த ஏற்பாடு செய்திருக்கின்றனர். பிரும்மஸ்ரீ அபிநவவ்யாஸ சுப்பராமகனபாடிகள் ஸ்ரீமத்ப்ராந்த்ய ப்ராம்மண ஸபை கார்யதரிசி க்ருஹ்பக்ஞ உமாமகேசுவர சாஸ்திரிகள் திருவண்ணாமலை வெங்கட்ரமணசாஸ்திரிகள், சிதம்பரம் ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள் வக்கீல், வெங்கட்ரமணசாஸ்திரிகள் B.A., L.T. முதலிய பலர் வருகிறார்கள். ஸந்தியா, ஔபாஸனம், ச்ராத்தம், பிரும்மயக்ஞம் முதலிய விஷயங்களைப் பற்றி உபன்யாஸம் நடக்கும். மத விருத்தமான சட்டங்கள் கண்டிக்கப்படும்.

வே. ஸோமதேவசர்மா.

---

உ

# கம்பராமாயணம்.

I

இவ்வுலகுமுழுவதும் படைத்த இறைவன் நம்மேற் கருணை கூர்ந்து

अष्टादश महाविद्याः ब्रह्मनिश्वाससम्भवाः ।

என்றபடி பதினெண்வித்தைகளை நமக்களித்துள்ளார். அப்பதினெண்வித்தைகளாவன:—

अङ्गानि वेदाश्चत्वारो मीमांसान्यायविस्तरः ।
पुराणं धर्मशास्त्रं च विद्या ह्येताश्चतुर्दश ॥
आयुर्वेदो धनुर्वेदो गान्धर्वश्चेति ते त्रयः ।
अर्थशास्त्रं चतुर्थं तु विद्या ह्यष्टादश स्मृताः ॥

சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்னும் வேதத்தின் ஆறு அங்கங்கள். ருக், யஜுஸ், ஸாம அதர்வமென்னும் நான்கு வேதங்கள், மீமாம்ஸை, தர்க்கம், புராணம், தர்மசாஸ்திரம், ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வம், அர்த்த சாஸ்திரமென்னும் பதினெண்வித்தைகள் கருதப்படுகின்றன' என்று மஹாபாரதத்தில் சாந்திபர்வத்தில் ராஜதர்மபர்வாவில் கூறியிருக்கிறது.

ஔசனஸபுராணத்தில் லீலாகண்டத்தில்

**इतिहासपुराणं तु ह्यकृत्व श्रुतिचोदितः ।**

என்று கூறியவாறு கீழ்ச்சொல்லிய 'புராணம்' என்ற சொல் இதிஹாஸத்தையும் குறிக்கிறது. இவ்விதிஹாஸபுராணங்களை ஐந்தாவதுவேதமாகக் கருதப்படுகின்றன. இதனை சிவாஹஸ்யப் பிற்பகுதியால் 'त्रिपाद्भूतिशिवगीता' என்பதில்

**इतिहासपुराणं तु पञ्चमो वेद ईरितः ।**

என்ற செய்யுளிற் காட்டியிருக்கின்றது. முன்குறித்துள்ள பதினெண்வித்தைகளுள் இதிஹாஸபுராணங்களை முக்கியமான நான்குவேதங்களுக்குச் சமமாக छान्दोग्यम् 7-வது அத்தியாயம் முதற்கண்டத்தில்

**ऋग्वेदं भगवोऽध्येमि यजुर्वेदं सामवेदमाथर्वणं चतुर्थमितिहासपुराणं पञ्चममिति ।**

என்றும், ஆபஸ்தம்பீய பிரும்மயக்ஞத்தில்

**ऋग्वेदं तर्पयामि + इतिहासपुराणं तर्पयामि ।**

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வைந்தாவது. வேதமாகிய இதிஹாஸத்திற் சிறந்தது இராமாயணமெனவுரைக்கலாம். இதனை ஸந்தானலாபம், ஸம்பல்லாபம் முதலிய எல்லாமளிக்கவல்ல மஹிமை வாய்ந்ததாக நினைத்து நம்மில்அனைவரும் தினமும் பூஜித்தும் பாராயணம் செய்தும் வருகிறார்கள். இவ்விராமாயணத்தை முதலில் பகவான் வால்மீகி மஹர்ஷியே இயற்றினர். இஃதோர் வடமொழி நூல். இம்மொழியே ஆர்யர்களாகியநமக்குத்தாய்மொழியாகும். நாம்பேசும் மொழி அவ்வத்தேசத்திற்கேற்பப் பலவாறுமாறுபடினும் நித்திய நைமித்திகாதி கர்மாக்களில் வடமொழியையே நாம் யாவரும் கையாண்டு வருகிறோம். உதாரணமாக 'வசுவுருக்கொண்ட தகப்பனை திருப்தியுறச் செய்கிறோ'மென கூறவாறு தேச பாஷையில் மொழிபெயர்த்துக் கூறுங்காலமாத்திரமின்னும் நெருங்கவில்லை. நம் தாய் நூலாகிய வேதம் தொன்றுதொட்டு எல்லா நூல்களும் தேவபாஷையெனப்படும் வடமொழியிலேயே உள்ளது. அம்மாதிரியேஇராமாயணம் என்ற மஹேதிஹாஸமும் வடமொழி நூலே.

பிராமணர்களாகிய நாமனைவரும் ஸம்ஸ்கிருதத்திலுள்ள இராமாயணத்தையே படித்தலும், கேட்டலும், அவசியமாகும். மற்ற பாஷைகளிலியற்றியதைப் படித்தலாவது கேட்டலாவது நமக்குத்தகா. இதனை

भाषया रचितं काव्यं पुराणं वापि यः पठेत् ।
स गच्छेन्नरयं घोरं सप्तकल्पं न संशयः ॥

நாம் பேசும் பாஷைகளிலியற்றியுள்ள காவ்யத்தையோ, புராணத்தையோ பொருவன் படிக்கின் ஏழுகல்பமளவும் கொடுமான நரகத்திலிருக்க நேருமென்பதற்கு ஐயமில்லை.

दिव्यभाषां परित्यज्य भाषया रचितानि च ।
यैः पुराणानि श्रूयन्ते ते वै निरयगामिनः ॥ पाद्मे ।

தேவபாஷையை விடுத்து மற்ற பாஷையில் அமைத்துள்ள புராணங்களைக் கேட்போர் நரகத்தையடைவர்.

दिव्यभाषां परित्यज्य भाषया रचितानि च ।
शास्त्राणि ये प्रशृण्वन्ति ते वै निरयभागिनः ॥
(भारते शेषधर्मे)

தேவபாஷையை விடுத்து பாஷா சாஸ்திரங்களை (புராணம் முதலியன) கேட்போர் நரகம் செல்வர்

कर्नाटद्राविडीयानि ह्यान्ध्रकेरळजानि च ।
वचांसि ये प्रशृण्वन्ति ते वै निरयगामिनः ॥

கன்னடம், தமிழ், தெலுங்கு, மலையாளம் முதலிய பாஷைகளில் இயற்றியவைகளைக் கேட்போர் நரகமடைவர்.

என்ற பல புராணச் செய்யுள்களும் ஸ்மிருதிச் செய்யுள்களும் நன்கெடுத்துக்காட்டுகின்றன.

ஸம்ஸ்கிருதம் பேசும் வன்மையற்றவர்களும், பிராகிருதமாகிய தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவென்னும் தென்னாட்டு மொழிகளையும், மஹாராஷ்ட்ரி, குஜராய், வங்காளி, ஹிந்தி முதலிய வடநாட்டுமொழிகளையும், மாத்திரமறியும் ஸ்திரீகளும் சூத்திரர்களுமாத்திரமே பாஷாநூல்களைப் படிக்கவும் கேட்கவும் தக்கவதிகாரிகளாவார்கள்.

स्त्रीशूद्रद्विजबन्धूनां त्रयी न श्रुतिगोचरा ।

ஸ்திரீகள், சூத்திரர்கள், பிராமணர்களுக்குப் பிறந்தவர்கள் ஆகிய இவர்கள் வேதத்தைக்கேட்கத்தகாதவர்கள் என்றதை அநுஸரித்து முக்கியமாயவர்களுக்காகவே வேதத்திற் கூறிய தமர்ங்களை அவர்களெளிதில் அறியுமாறு புராணங்களியற்றப்பட்டிருப்பினும்

श्रावयेच्चतुरो वर्णान् कृत्वा ब्राह्मणमग्रतः ॥

பிராமணர்களை முன்னிட்டுக்கொண்டே நான்கு வர்ணத்தவருக்கும் புராணத்தைக் கூறவேண்டும். என்றபடி முக்கியமாய் பிராமணர்களையே கேழ்க்கச் செய்யவேண்டும்.

பிராமணர்களோ வடமொழி நூல்களைத்தவிர பாஷா நூல்களை வாசித்தலோ, கேட்டலோ, கூடாது. அப்படி கேட்டதாலுண்டாகும் தோஷத்தை

शास्त्रेषु निरताः मर्त्याः पुराणेषु रताः द्विजाः ।
भाषारचितशास्त्रेषु बुद्धिमन्वयपरित्यजेत् ॥

சாஸ்திரபுராணங்களைக் கேட்டறிய விரும்பும் பிராமணர்கள்பாஷா சாஸ்திரங்களில் மனப்பற்றை யொழிக்கவேண்டும்.

पुराणधर्मशास्त्रेषु भक्तिहीनाश्च ये द्विजाः ।
भाषाशास्त्रेषु निरताः ते वै निरयगामिनः ॥

புராணங்கள் தர்மசாஸ்திரங்கள் இவைகளில் கூறியுள்ளதைப் பொருட்படுத்தாது பாஷாசாஸ்திரங்களில் பற்றுடையவர்கள் நரகமடைவர்களே என்று கிருஷ்ணபகவான் தர்மராஜருக்குக் கூறியுள்ளார்.

நாம் ஸம்ஸ்கிருத நூல்களை பாஷாந்தர தர்ஜமாகச்செய்து படித்தலில் எவ்வாறு தோஷமெனக் கருதுகிறோமோ இம்மாதிரியே மேல் நாட்டாரும் லாட்டின் (Latin) பாஷையிலிருந்த தங்கள் வேதமாகிய பைபிளை (Bibil) இங்கிலீஷ் பிரெஞ்சு முதலிய பாஷைகளில் தர்ஜம் செய்துப் படிப்பதைத் தோஷமாகக் கருதி வெகுகாலம் வரைத் தங்களுக்குப் பொருட்படாவிடினும் அப்பாஷையிலேயே படித்து வந்தனர். பிறகு ஒரு காலத்தில் இக்கட்டுப்பாடுகள் சிதறுண்டுபோயின. நம் நாட்டிலும் அக்காலம்சிறிது நெருங்கியதுபோலும்.

## II

இதுகாறும் பௌராணிகர்கள் வான்மீகி ராமாயணத்தைப் படித்துப் பொருள் கூறி தர்மத்தை விளக்கி வந்தனர். இப்பொழுதோ சில பௌராணிக பிராம்மணோத்தமர்கள் கம்பராமாயணத்தை வாசித்து தர்மோபதேசம் செய்யத்தலைப்பட்டிருக்கின்றனர். இது நீதியா ? தர்மமா ? கம்பன்சொல் தேவவாக்கா, அல்லது மஹர்ஷி வாக்கா ? கம்பன் யார் ? ஓர் வரகவி, அவன் கூறுவதெல்லாம் தர்மமா ? கேழ்ப்போர்மனங்களிக்குமாறு கூறுவதேயல்லவா கவியின் முக்கிய நோக்கமாகும். இக்கம்ப ராமாயணத்திற்கு வான்மீகி ராமாயணத்தின் ஸ்தானம் பொருந்துமா ? ஒருக்காலுமில்லை. இதனால் கம்பன் நூலின் பெருமையும் சுவையும் இகழ்ந்து கூறியதாகாது. கம்பன் ஓர் சிறந்த வரகவியென்பதற்கையமில்லை. அவன் நூலும் தென்மொழி நூலுள் இரத்தனமெனப்படும்.

இருப்பினும் ஓர் கம்பராமாயணப் பிரசங்கி தன் முகவுரையில் **इत्यार्षे कम्बरामायणे** எனக் கூறுவது தகுமா ? அவர் **आर्षे** இருஷி கூறிய என்ற சொல் பொருட்படாமல் சொன்னதல்ல. அம்மஹான் கம்பனை மஹர்ஷியாகவே கருதியுள்ளார் என்பது திண்ணம்.

இவ்வாறு ஓர் மனிதனால் தன் புத்தி வன்மைக்கேற்ப சமத்காரமாய்த் தென்மொழியிலியற்றப்பட்டுள்ள கம்பராமாயணம், வில்லி பாரதம் அல்லது பெருந்தேவனார் பாரதம், பெரியபுராணம் இவைகளை வால்மீகி ராமாயணம், மஹாபாரதம், பக்தவிலாசம், இவைகளுக்குச் சமமாய் கருதுவது தவறு. வடநூல்களிலுள்ள தத்வங்களும் தர்மங்களும் ஒரு பொழுதுமவைகளிலமைந்தில.

(தொடரும்)

பண்டித. நீ. வைத்தினாதசாஸ்திரி.